இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 72 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 06 – வியாழக்கிழமை 23 அக்டோபர் 2025 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 72 : Thiruvalluvar Year - 2056 - Ayppasi 06 - Thursday 23 October 2025 - Chennai 12 Pages ₹ 5.00

## பருவ மழை தீவிரம்: சென்னையில் 215 நிவாரண முகாம்கள்! களப்பணியில் 24,149 பேர்!

# 1 லட்சத்து 47 ஆயிரம் பேருக்கு காலை உணவு!



சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நேற்று (22.10.2025) வடகிழக்கு பருவமழை – நிவாரணப் பணி குறித்து ஆலோசனைக் கூட்டம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், தி.மு.க. முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கை!

**சென்னை, அக். 23 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவுப்படி வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை மாநகரில் 215 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு இன்று ஏழை எளியோர் 1 இலட்சத்து 47 ஆயிரம் பேருக்கு காலை உணவு வழங்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் 24,149 பேர் களப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 16.10.2025 அன்று வடகிழக்குப் பருவமழை தொடங்கியதன் காரணமாக தமிழ்நாடு முழுவதிலும் பரவலாக பெய்து வரும் மழையினால் மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலும், கடந்த 19.10.2025 அன்று சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டு முன்னெற்பாடு நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும், கரையோரங்கள் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லவும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

இதன் தொடர்ச்சியாக மழையால் பாதிப்பு ஏற்பட்டால் மக்கள் தங்குவதற்காக முகாம்களை தயார்நிலையில் வைத்திருக்கவும், முகாம்களில் மக்களுக்கு வழங்கிட உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி உள்ளார்.

**மழைநீர் தேங்கும் பகுதிகளில் தீவிர கவனம்!**

சென்னையில் மேற்கொண்டு வரும் முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்தும் மழை நீர் தேங்கும் பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்துமாறும் முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவுகளுக்கேற்ப சென்னை மாநகரில் மழை நீர் தேங்கும் பகுதி களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளிலும் 215 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் தங்கவைக்கப்படும் மக்களுக்கு உணவு வழங்குவதற்காக 106 உணவு தயாரிப்புக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 68 உணவு தயாரிப்புக் கூடங்களில் உணவுகள் தயாரிக்கப்படுகின்றன.

சென்னையில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பெருநகர மாநகராட்சி வாயிலாக இந்த உணவு மையங்களிலிருந்து நேற்று (22.10.2025) காலை 1 இலட்சத்து 46 ஆயிரத்து 950 பேருக்கு காலை உணவு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

24 மணிநேரமும் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் பொதுமக்களிடமிருந்து 1913 என்ற உதவி எண்ணிற்கு வரும் புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 22 ஆயிரம் பேரும் சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் 2149 களப்பணியாளர்களும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

### சென்னை, அண்ணா அறிவாலயத்தில்

## வடகிழக்கு பருவமழை நிவாரணப் பணி - தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில்!

### தி.மு.க. முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது!

**சென்னை, அக். 23 -**

**முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் நிவாரணப்பணிகள் குறித்து எடுத்துரைப்பு இயற்கைப் பேரிடர்களில் மக்களோடு மக்களாக இருந்து களப் பணியாற்ற வேண்டும் என தி.மு.க.வினருக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

அது வருமாறு:-

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ள நிலையில், தி.மு.க.வினர் மேற்கொள்ள வேண்டிய மழை நிவாரணப்பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவுப்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையிலும், அமைச்சர் கே.என்.நேரு தலைமையிலும் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், சென்னை, தாம்பரம், ஆவடி ஆகிய மாநகராட்சிகள் மற்றும் பூவிருந்தவல்லி நகராட்சிக்கு உட்பட்ட மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், துணை மேயர்கள், கவுன்சிலர்கள், மாநகர, நகர, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நடப்பு பருவமழையின் போது தி.மு.க.வினர் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் நிவாரணப்பணிகள் குறித்து இக்கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டன.

கூட்டத்தில் பேசிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்,

எத்தனையோ பேரிடர்களில் இருந்து மக்களை காப்பாற்றியுள்ளோம் என்று தெரிவித்தார். அதே போல், இந்த மழை காலத்திலும் மக்களுடன் நின்று அவர்களை காப்போம் என்று உறுதிபட கூறினார். தி.மு.க.வினர் ஒவ்வொருவரும் போட்டி போட்டுக் கொண்டு மக்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

### வடகிழக்கு பருவ மழை தீவிரம்:

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அதிகாலையில் அதிரடி ஆய்வு!

## சமையல் கூடங்கள் — நிவாரண முகாம்களில் திடீர் சோதனை!

**சென்னை, அக். 23 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவ மழையையொட்டி அமைக்கப்பட்டுள்ள மைய சமையல் கூடம் மற்றும் தற்காலிக நிவாரண மையங்களில் பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்து நேற்று (22.10.2025) அதிகாலையில் திடீராய்வு மேற்கொண்டார்.**

துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று அதிகாலையில் சென்னை சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவல்லிக்கேணி வெங்கட்ரங்கம் தெருவில் செயல்பட்டுவரும் சமுதாய நலக்கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள மைய சமையல் கூடம் மற்றும் தற்காலிக நிவாரண மையம் ஆகியவற்றில் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, சிந்தாதிரிப்பேட்டை அய்யாதெருவில் உள்ள மைய சமையல் கூடத்தில் உணவு தயாரிக்க தேவையான கட்டமைப்பு வசதிகள் தயார் நிலையில் இருப்பதையும், சிந்தாதிரிப்பேட்டை மேற்கு கூவம்சாலையில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண மையத்தில் பொதுமக்கள் தங்குவதற்கு தேவையானபாய், தலையணை உள்ளிட்டவை தயாராக இருப்பதையும், அடிப்படை வசதிகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அண்ணாசாலை - ஜி.பி.சாலை சந்திப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மழைநீர் வடிகால் கட்டுமான பணிகளை துணை முதல்வர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது வடகிழக்கு பருவமழை காலத்தில் பெய்யும் கனமழையை பொதுமக்கள் எதிர்கொள்ள தேவையான உதவிகளையும், பணிகளையும் அர்ப்பணிப்பு உணர்வுடன் மேற்கொள்ள அனைத்து துறை அலுவலர்களுக்கும் துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளில் பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டாரவி தேஜா, துணை ஆணையர் (வருவாய்) எம்.பிரித்விராஜ், மண்டல அலுவலர் டி.விஜய்பாபு மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகளையொட்டி, சென்னை சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சிந்தாதிரிப்பேட்டை மேற்கு கூவம் சாலை சென்னை உயர்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண மையத்தில் பொதுமக்கள் தங்குவதற்கு தேவையான பாய், தலையனை உள்ளிட்டவை தயாராக இருப்பதையும், அடிப்படை வசதிகள் குறித்தும் நேற்று (22.10.2025) அதிகாலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.